www.StudyGuideIndia.com

**7060**

Register Number | | | | | | |

**Part III**

# வரலாறு / HISTORY

( Tamil Version )

நேரம் : 3 மணி ]                                                  [ மொத்த மதிப்பெண்கள் : 200

பகுதி - அ

*குறிப்பு :* அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.                45 × 1 = 45

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக :

1. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு

அ) 1757

ஆ) 1764

இ) 1772

ஈ) 1777.

2. காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்தியது

அ) மகல்வாரிமுறை

ஆ) நிலையான நிலவரித்திட்டம்

இ) இரயத்வாரி முறை

ஈ) ஜாகீர்தாரி முறை.

[ Turn over

www.StudyGuideIndia.com

3. இந்தியாவில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்ட ஆண்டு

அ) 1833

ஆ) 1835

இ) 1837

ஈ) 1839.

4. சதி இவரது ஆட்சிக் காலத்தில் ஒழிக்கப்பட்டது

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

ஆ) காரன்வாலிஸ் பிரபு

இ) வெல்லெஸ்லி பிரபு

ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு.

5. எந்த மாகாண ஆட்சிக்கு லாரன்ஸ் சகோதரர்கள் சேவையாற்றினார்கள் ?

அ) பர்மா

ஆ) பஞ்சாப்

இ) வங்காளம்

ஈ) மைசூர்.

6. விதவைகள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

அ) 1846

ஆ) 1856

இ) 1870

ஈ) 1891.

www.StudyGuideIndia.com

7. நெல்கட்டும்செவல் பகுதியை கைப்பற்றியவர்

அ) கர்னல் ஹெரான்

ஆ) கர்னல் கேம்ப்பெல்

இ) காலின் ஜாக்சன்

ஈ) புலித்தேவர்.

8. பின்வருபவர்களில், 1857 ஆம் ஆண்டு கலகத்தை முதல் இந்திய விடுதலைப்போர் என்று கருதியவர் யார் ?

அ) வீரசவார்கர்

ஆ) சர். ஜான் லாரன்ஸ்

இ) எஸ். என். சென்

ஈ) ஆர். சி. மஜும்தார்.

9. இந்தியாவின் முதல் வைஸ்ராய்

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

ஆ) டல்ஹவுசி பிரபு

இ) கானிங் பிரபு

ஈ) ரிப்பன் பிரபு.

10. பின்வருபவர்களில் அலிகார் இயக்கத்தை தொடங்கியவர் யார் ?

அ) சர் சையது அகமதுகான்

ஆ) சலிமுல்லாகான்

இ) முகமது அலி ஜின்னா

ஈ) முகமது அல்-ஹாசன்.

www.StudyGuideIndia.com

11. சத்திய ஞானசபை நிறுவப்பட்ட இடம்

அ) மதுரை

ஆ) இராமேஸ்வரம்

இ) வடலூர்

ஈ) சிதம்பரம்.

12. இந்திய தேசிய காங்கிரசை தோற்றுவித்தவர்

அ) டபிள்யூ. சி. பானர்ஜி

ஆ) ஏ. ஓ. ஹியூம்

இ) மகாத்மா காந்தி

ஈ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

13. கேடா சத்யாகிரகத்தை காந்தி யாரை ஆதரிப்பதற்காக தொடங்கினார் ?

அ) அவுரிப் பண்ணையாளர்கள்

ஆ) ஆலைத் தொழிலாளர்கள்

இ) குடியானவர்கள்

ஈ) தொழிற்சாலை பணியாளர்கள்.

14. சௌரி சௌரா நிகழ்ச்சி நடைபெற்ற ஆண்டு

அ) 1920

ஆ) 1921

இ) 1923

ஈ) 1922.

15. வேதாரண்யம் உப்பு சத்யாகிரகத்திற்கு தலைமையேற்றவர்

அ) காந்தி

ஆ) ராஜாஜி

இ) வ. உ. சி

ஈ) காமராஜ்.

www.StudyGuideIndia.com

16. பின்வருவனவற்றுள் ஈ. வெ. ரா. பெரியார் தொடங்காத பத்திரிக்கை எது ?

அ) குடியரசு

ஆ) புரட்சி

இ) விடுலை

ஈ) சுயராஜ்யா.

17. இந்திய ஒன்றியத்தில் சேர மறுத்த அரசு

அ) ஹைதராபாத்

ஆ) மைசூர்

இ) ஜெய்பூர்

ஈ) திருவாங்கூர்.

18. பின்வருபவர்களில் நவீன அறிவியலின் தந்தை என்று கருதப்படுபவர் யார் ?

அ) கோபர்நிகஸ்

ஆ) பிரான்சிஸ் பேகன்

இ) கெப்ளர்

ஈ) நியூட்டன்.

19. பொது அறிவு என்னும் நூலின் ஆசிரியர் யார் ?

அ) வால்டேர்

ஆ) பெஞ்சமின் பிராங்க்ளின்

இ) தாமஸ் பெய்ன்

ஈ) தாமஸ் ஜெபர்சன்.

20. பன்னாட்டு கழகம் உருவாக காரணமாக இருந்தவர்

அ) ஜார்ஜ் வாஷிங்டன்

ஆ) ஹாரி ட்ரூமன்

இ) எஃப். டி. ரூஸ்வெல்ட்

ஈ) உட்ரோ வில்சன்.



www.StudyGuideIndia.com

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக :

21. இரட்டையாட்சியை அறிமுகப்படுத்தியவர் .................. .

22. ராணுவத் துறையில் வில்லியம் பெண்டிங் பிரபு .................. முறையை ரத்து செய்தார்.

23. 'பகிஷ்கிரிட் ஹிடாகாரிணி' சபையை அமைத்தவர் .................. .

24. வேலூர் கோட்டையின் இராணுவத் தளபதி .................. .

25. சுவாமி தயானந்த சரஸ்வதி எழுதிய நூல் .................. .

26. ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு .................. .

27. சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை தொடங்கியவர் .................. .

28. நவீன இந்தியாவின் சிற்பி என கருதப்படுபவர் .................. .

29. அலெக்சாந்தர் கிரஹாம் பெல் .................. கண்டுபிடித்தார்.

30. உலக வர்த்தக மையத்தின் ( WTO ) தலைமையிடம் உள்ள இடம் .................. .

III. நிரல் 'அ' வின் கீழ் உள்ளவற்றை நிரல் 'ஆ' உடன் பொருத்துக.

| | 'அ' | | 'ஆ' |
|---|---|---|---|
| 31. | கரீம்கான் | அ) | பாசிசம் |
| 32. | கர்னல் ஜில்லஸ்பி | ஆ) | மான்டஸ்கியூ |
| 33. | வங்கப் பிரிவினை | இ) | பிண்டாரிகள் |
| 34. | சட்டத்தின் சாரம் | ஈ) | கலகத்தை ஒடுக்கியவர் |
| 35. | முசோலினி | உ) | கர்சன் பிரபு. |

www.StudyGuideIndia.com

IV. 36. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் 1774 ல் வில்லியம் கோட்டையின் ஆளுநராக பதவியேற்றார்.

ஆ) வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆட்சிக் காலத்தில் ரோகில்லாப் போர் நடைபெற்றது.

இ) ஒழுங்குமுறைச் சட்டத்தின் படி இயக்குநர்கள் மன்றத்தின் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

ஈ) ராஜா செயித்சிங் அயோத்தியின் ஆட்சியாளர் ஆவார்.

37. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) லிட்டன் பிரபுவின் ஆப்கானியக் கொள்கையை பின்பற்றும்படி ரிப்பன் பிரபு அறிவுறுத்தப்பட்டார்.

ஆ) நாட்டு மொழி செய்தித்தாள் சட்டத்தை ரத்து செய்து இந்தியர்களிடையே ரிப்பன் பிரபு புகழ் பெற்றார்.

இ) ரிப்பன் பிரபு கல்விச் சீர்திருத்தங்களில் சொற்ப கவனமே செலுத்தினார்.

ஈ) 1882 ல் ரிப்பன் பிரபு தொழிற்சாலை சட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

38. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) விக்டோரியா மகாராணியின் அறிக்கையை கானிங் பிரபு அலகாபாத்தில் அறிவித்தார்.

ஆ) மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் ஆளுநரான மார்லி பிரபுவையும் இந்திய செயலர் மிண்டோ பிரபுவையும் குறிக்கிறது.

இ) 1919 ம் ஆண்டு சட்டம் இரட்டையாட்சியை மத்தியில் அறிமுகப்படுத்தியது.

ஈ) மத்தியில் ஓர் அவைக் கொண்ட சட்டமன்றம் நிறுவப்பட்டது.

www.StudyGuideIndia.com

39. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) ஜான் கூடன்பர்க் வெளியிட்ட முதல் புத்தகம் பைபிளாகும்.

ஆ) நவீன அறிவியலின் தந்தையாக டெகார்ட் கருதப்படுகிறார்.

இ) ஹீலியோ சென்ட்ரிக் கோட்பாட்டை நியூட்டன் உருவாக்கினார்.

ஈ) இரத்த ஓட்டத்தை கண்டுபிடித்தவர் தாமஸ்மூர் ஆவார்.

40. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) அமெரிக்கா பன்னாட்டு கழகத்தில் உறுப்பினராகவில்லை.

ஆ) உலகப் போரை தடுப்பதில் பன்னாட்டு கழகம் வெற்றி பெற்றது.

இ) ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்காமல் பன்னாட்டு கழகம் தடுத்தது.

ஈ) பன்னாட்டு கழகத்தின் முடிவுகளை ஹிட்லரும் முசோலினியும் மதித்து நடந்தனர்.

V. கீழ்க்காணும் கூற்றுகளில் எது **சரி**, எது **தவறு** என்பதனைக் குறிப்பிடுக.

41. 1853 ல் பம்பாய்க்கும் தாணாவுக்கும் இடையேயான முதல் இரயில் போக்குவரத்து துவங்கப்பட்டது.

42. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம் இந்திய பத்திரிக்கைகளின் சுதந்திரத்தை நசுக்கியது.

43. 1858 ஆம் ஆண்டு சட்டம் இந்தியாவின் தலைமை ஆளுநரை இந்தியாவின் வைஸ்ராயாக நியமித்தது.

44. டாக்டர் காப் என்பவரது தலைமையில் ஸ்பானிய உள்நாட்டுப் போர் தொடங்கியது.

45. ஐ. நா. பாதுகாப்பு அவையில் உள்ள நிரந்தர உறுப்பினர்கள் மற்றும் தற்காலிக உறுப்பினர்கள் இருவருக்கும் சிறப்பு ரத்து அதிகாரம் உண்டு.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஆ

VI. குறிப்புகள் : i) ஏதேனும் பதினைந்து வினாக்களுக்கு மட்டும் சிறுகுறிப்பு வரைக.

ii) ஒவ்வொன்றிற்கும் மூன்று குறிப்புகள் அளித்தல் வேண்டும்.

15 × 3 = 45

46. பிட் இந்திய சட்டம்

47. காரன்வாலிஸ் பிரபுவின் காவல்துறை சீர்திருத்தங்கள்

48. துணைப்படைத் திட்டத்தின் குறைகள்

49. சதி

50. வுட்-அறிக்கை

51. இரயத்துவாரி முறை

52. பெண் சிசுக்கொலை

53. கர்னல் ஜில்லஸ்பி

54. கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கி தோட்டாக்கள்

55. ஸ்ரீவைகுண்ட சுவாமிகள்

56. வங்கப் பிரிவினை

57. தண்டி யாத்திரை

58. ஜி. சுப்ரமணிய அய்யர்

59. பேரரசியின் அறிக்கை

60. பசுமைப் புரட்சி

[ Turn over

www.StudyGuideIndia.com

61. லியானார்டோ டாவின்சி

62. இயேசு சபை

63. பாஸ்டன் தேநீர் விருந்து

64. ஜான் மெக்காடம்

65. கெடுபிடிப் போர்.

## பகுதி - இ

VII. *குறிப்புகள் :* i) பின்வருவனவற்றில் ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக. அவற்றில் வினா எண் **77**-க்கு **கட்டாயமாக** விடையளித்தல் வேண்டும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக. 10 × 6 = 60

66. அ) ஒழுங்குமுறை சட்டத்தின் முக்கிய விதிமுறைகள் பற்றி விவாதிக்க.

*அல்லது*

ஆ) துணைப்படைத்திட்டத்தின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

67. அ) பிண்டாரிகளை ஒழிக்க ஹேஸ்டிங்ஸ் பிரபு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி விவரி.

*அல்லது*

ஆ) வாரிசு இழக்கும் கொள்கையின் கருத்து மற்றும் நடைமுறை பற்றி எழுதுக.

www.StudyGuideIndia.com

68. அ) காரன்வாலிஸ் பிரபுவின் நீதித்துறை சீர்திருத்தங்களை மதிப்பிடுக.

*அல்லது*

ஆ) நிலையான நிலவரித் திட்டத்தின் சிறப்பு கூறுகளைக் குறிப்பிடுக.

69. அ) வேலூர் கலகத்தின் போக்கினை விவரி.

*அல்லது*

ஆ) 1857 ஆம் ஆண்டு கலகத்தின் விளைவுகளை ஆய்க.

70. அ) லிட்டன் பிரபுவின் பஞ்ச நிவாரணக் கொள்கையைப் பற்றி குறிப்பு எழுதுக.

*அல்லது*

ஆ) இராமலிங்க அடிகளின் கொள்கைகளை விவரி.

71. அ) சுதேசி இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக.

*அல்லது*

ஆ) ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக.

72. அ) தேசிய இயக்கத்தில் வ. உ. சி. யின் பங்கினை பற்றி விவாதிக்க.

*அல்லது*

ஆ) நீதிக்கட்சியின் கல்வி சீர்திருத்தங்களை விவரி.

www.StudyGuideIndia.com

73. அ) 1858 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.

*அல்லது*

ஆ) இந்திய அரசியலமைப்பின் சிறப்பு கூறுகளை பற்றி விவரி.

74. அ) புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்களை ஆய்க.

*அல்லது*

ஆ) சமயசீர்திருத்தங்களின் விளைவுகளை மதிப்பிடுக.

75. அ) பிலடெல்பியா மாநாடு பற்றி குறிப்பு வரைக.

*அல்லது*

ஆ) பிரெஞ்சுப் புரட்சிக்கு பிரான்சின் சிந்தனையாளர்கள் பங்களிப்பினை ஆய்க.

76. அ) இங்கிலாந்தில் தொழிற் புரட்சியின் போக்கை விவரி.

*அல்லது*

ஆ) பன்னாட்டு கழகத்தின் முக்கிய உறுப்புகளை விவரி.

77. அ) முதல் உலகப்போரின் விளைவுகளை ஆய்க.

*அல்லது*

ஆ) மாசேதுங் பற்றி ஒரு குறிப்பு வரைக.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

VIII. *குறிப்புகள் :* i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. அவற்றுள் வினா எண். **84**-க்கு கட்டாயமாக விடை தருதல் வேண்டும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

5 × 10 = 50

78. அ) வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்களை தொகுத்து கூறுக.

*அல்லது*

ஆ) வெல்லெஸ்லி பிரபுவின் சாதனைகளை மதிப்பிடுக.

79. அ) 'பெண்டிங் பிரபு சமூக சீர்திருத்தங்கள் காலத்தை தொடங்கி வைத்தார்' - கருத்துக் கூறுக.

*அல்லது*

ஆ) பிரிட்டிஷாருக்கு எதிராக கட்டபொம்மன் மேற்கொண்ட வீர போராட்டத்தை மதிப்பிடுக.

80. அ) இந்திய விடுதலை இயக்கத்தில் மகாத்மா காந்தியின் பங்கினை விவரி.

*அல்லது*

ஆ) இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கினை ஆய்க.



www.StudyGuideIndia.com

81. அ) புவியியல் கண்டுபிடிப்புகளின் தாக்கத்தை ஆய்க.

*அல்லது*

ஆ) ஜெர்மனியில் சமயசீர்திருத்த இயக்கத்திற்கு மார்டின் லூதரின் பங்களிப்பை ஆய்க.

82. அ) முதல் உலகப் போருக்கான பல்வேறு காரணங்களைக் கூறுக.

*அல்லது*

ஆ) ஜெர்மனி மற்றும் இத்தாலியில் சர்வாதிகாரத்தின் எழுச்சியை தொகுத்துக் கூறுக.

83. அ) நவீன உலகில் ஜப்பானின் எழுச்சியை தொகுத்து எழுதுக.

*அல்லது*

ஆ) உலக வர்த்தக அமைப்பை முறைப்படுத்துவதில் உலக வர்த்தக மையத்தின் பங்கினை ஆய்க.

84. அ) I. இந்திய வரைப்படத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும் :

i) டெல்லி

ii) பம்பாய்

iii) கல்கத்தா

iv) ஹைதராபாத்

v) சென்னை.

*மற்றும்*

II. வெல்லெஸ்லி பிரபுவின் கீழ் இருந்த ஆங்கில பேரரசினை வரைக.

*அல்லது*

www.StudyGuideIndia.com

ஆ) 1920 முதல் 1950 வரை நடைபெற்ற இந்திய விடுதலைப் போர் நிகழ்ச்சிகளில் ஐந்தினை காலக்கோடு காட்டி வரைக.

அல்லது

இ) அமெரிக்க விடுதலைப் போரின் போது நடந்த ஐந்து நிகழ்ச்சிகளை காலக்கோடு காட்டி வரைக.

www.StudyGuideIndia.com

www.StudyGuideIndia.com